www.tamilarangam.net

# TELO

# ஈழமகள் நான் அழுகின்றேன்



மறைந்த தோழர் சிறீ சபாரத்தினம்

அவர்களின் ஓராண்டு நினைவாக
இக் கவிதைத் தொகுதி
வெளியிடப்படுகிறது.

வெளியீடு-லண்டன் TELO கிளை.

06-05-1987

அன்பளிப்பு - £1 பவுண்

## தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"புலிப்படையினரின் இயக்க அராஜகங்களின் விளைவாக நூற்றுக்கணக்கான விடுதலைப் போராளிகள் 'ஈழமண்ணில்' படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்

இச் சம்பவங்கள் தமிழ் பேசும் மக்களினது மனவலிமையையும் விடுதலைவேட்கையையும் சிதறடித்து ஈழத்து விடுதலையை பின்தள்ளிவிட்டது

இச் சம்பவங்கள் எம்மினத்தின் விடுதலைப்போராட்டத்தில் மறக்கப்பட முடியாத ஒரு வரலாற்று பாடமாகும்

கடந்த மாதம் 6ம் திகதியில் ஈழமண்ணில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தினது தலைவர் சிறீசபாரத்தினம் அவர்களினது 31ம் நாளை நினைவுகூரும் இத்தினத்தினில் எமது வரலாற்றில் புலிப்படையால் எழுதப்பட்ட "கறுப்பு அத்தியாயத்தை" நாம் மீண்டும் மக்களுக்கு நினைவுபடுத்த விளைகின்றோம்

இது கருதி ஆக்கப்பட்ட இக் 'கவிக்கொத்து' ஈழத்து விடுதலைப்போரில் தம் உயிர்களை அர்ப்பணித்த அனைவருக்கும் சமர்ப்பணமாகும்----"

"இறுதிவெற்றி எம்முடையதே"
தமிழ் ஈழ விடுதலை இயக்கம்-

**P. S.** சிவா-

## ஈழமகள் (1)
## நான்
## அழுகின்றேன்

******************************

ஈழத்தின் தலைமகனே!
அமைதியின் முழுவடிவாய்
அடக்கத்தின் திருவுருவாய்-எம்
மண்ணில் வாழ்ந்தவனே! -நீ
ஈழத்தின் விடுதலைக்காய்
செய்திட்ட சேவைகளை -கண்ணிமைக்கும்
காலத்தில் மறந்தங்கு-உன்
கோலத்தை அழித்தனரோ-----------?

எத்தனையோ இடர்நடுவே
எதிர்புரட்சி சதிநடுவே -உன்
வல்லமையால் எம்மவரை
வழிநடத்தி வாழ்ந்துவந்தாய்
எல்லோர்க்கும் வழிகாட்டி
ஏற்றமுடன் பாடுபட்டாய் -இவைமறந்து
"பொல்லாத புலிகள்" அங்கு-உன்னை
பொறாமைதனில் சுட்டனரோ----------?

வெறிபிடித்த இராணுவத்தோர்
தறிகெட்டு ஓடிடவே
சொல்லாலும் செயலாலும்
செங்களங்கள் பலகண்டாய் -எம் மண்ணில்
நில்லாமல் ஓடவைத்தாய்
நிலைகுலைத்தாய் இராணுவத்தை
எல்லோர்க்கும் தலைமகனாய்
எம்மினத்தைக் காத்துவந்தாய் -அதுகண்டு
"பொல்லாத புலிகள்" அங்கு-உன்னை
பொறாமைதனில் சுட்டனரோ----------?

அல்லலுறும் எம்மினத்தின்
அடிதளர்ந்த நிலைகண்டு
சொல்லளவில் நில்லாமல்
செயல்வடிவாய் அதுகாட்ட
இன்றுவரை
இல்லாத ஒற்றுமைக்காய் -உன்னால்
இயன்றவரை பாடுபட்டாய்
வல்லோரை வழிப்படுத்தி
வறியவர்க்காய் குரல்கொடுத்தாய் -இதுகண்டு
"பொல்லாத புலிகள்" அங்கு-உன்னை
பொறாமைதனில் சுட்டனரோ----------?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எந்த மண்ணின் விடுதலைக்காய்

பாடுபட்டு வந்தாயோ-அந்த
மண்ணில் தங்கியிருந்து
போராடப் பயந்தவர்கள்
சொந்த மண்ணில்
தங்கிநின்ற
என்மகனே உனைக்கண்டு
உள்ளமது பொறுக்காத
எம்மினத்தின் எட்டப்பன்-தன்
தாகமுமே தணிப்பதற்கு
செங்குருதி தனைத்தேடி
"பொல்லாத புலிகள்" அங்கு-உன்னை
பொறுமைதனில் சுட்டனரோ----------?

ஓ, மகனே---!
உன் அன்னை மகனிழந்தாள்
உன் தோழர் தலைவிழந்தார்
ஆயினும் என்
எம்மினத்தின் அன்னையர்கள்
பெற்றெடுத்த பிள்ளையெல்லாம்-நீ
சென்றுவிட்ட பாதையிலே
செல்வதற்கு குரல்கொடுத்து
ஈழமகள் நான் அழுகின்றேன்

என் மகனே
காலமது மாறுமன்றோ-நான்
உன் கல்லறையில்
கண்ணீரால் அஞ்சலிக்கும்
காலமது மாறுமன்றோ--------------!

வேளைபார்த்து உனைக்கொன்ற
வெறிபிடித்த புலிப்படையின் நிறம் வெளுக்க
காலமது மாறுமன்றோ-------------,,-!

ஈழத்தின் விடுதலைக்காய்
காலமெல்லாம் வாழ்ந்துவிட்ட-உன்
பாதையது மலர்வதற்காய்-நான்
கண்ணீரால் அஞ்சலிக்கும்
காலமது மாறுமன்றோ--------------!



## நினைவுச் சமாதியில் சபதம் செய்வோம்!

"எதிரியை அழிக்கத்தான் எங்களுக்கு ஆயுதங்கள்-அவற்றை
திசைமாறி பாவிப்பவன் திரிபுவாதத்தால்
எதிரிக்கு துணையான எதிர்புரட்சி சதியாளன்"

ஓ சிறி அண்ணா! .
எங்களின் வழிகாட்டியே!
மக்களின் மானசீக தலைவனே!
மண்ணிப்பதில் பரமபிதாவே!
அன்று
பயிற்சி முடிவடைந்து
போராட்டத்தை தொடர
ஈழத்திற்கு செல்லவிருந்த
எமக்கு நடாத்தப்பட்ட
இறுதி வகுப்பில்
நீ!
உரைத்துவிட்ட
இந்த வார்த்தைகள்*****
அந்த வார்த்தைகள்
இன்றும் கூட
இத்தனை அராஜகங்கள்
ஈழத்தில் நடந்தபின்பும்
உனது
உறுதியான உதடுகளால்
உச்சரிக்கப்பட்ட
அந்த வார்த்தைகள்*************
கிளர்ந்து வந்து
எம்மை
இறுக்கப்பட்ட கடிவாளங்களாக
கட்டுப்படுத்தி வைக்கின்றன*****
ஆனால்
மக்களின் தலைவனே!
எங்களின் தோழனே!
அன்று
உற்சாகத்துடன்
உனது அணிவகுப்பில்
தொடர்ச்சியான போராட்டத்தினை
எமது மண்ணில்
நடாத்தப் புறப்பட்ட போது
வராத சந்தேகங்கள்
இப்போது வந்துவிட்டன*******

www.tamilarangam.net



ஏனெனில்
எமது மக்களின் தேசியவிடுதலைக்காக
ஆயுதங்களை ஏந்திவிட்ட
எதிர்ப்புரட்சி சக்திகள்*****
'பசுத்தோலைப் போல'
தமக்கு மேலாக
தாமே போர்த்திவிட்ட
'பாசிச தோலினால்'-தமது
நிறத்தை மாற்றிக் கொண்டு****
வஞ்சக நினைவுகளோடு
கூடி நின்று
கையும் கோர்த்து
ஒற்றுமை என்று 'ஊளையிட்டு'
பதவி ஆசையில்
புரட்சியை மறந்துவிட்டனர்*****
ஏனைய போராளிகள்
எதிரியின் மேலாக
தங்களின் பார்வைகளை
நிதானித்து வைத்திருந்த
வேளையைத் தேர்ந்தெடுத்து****
எமக்குப் பின்னால்
எமக்குத் தெரியாமல்
எமது முதுகுகளில்
தமது தப்பாக்கிகளால்
சுட்டுத்தள்ளிய போது******!
எங்களைப் போன்றவர்களே
எதிரியின் கையாட்கள் ஆகி
'விடுதலைப்போராளி வேசமிட்டு'
மக்களின் மத்தியிலே
ஆயுதங்கள் ஏந்தி அணிவகுத்து நிற்கும்
உண்மையைக் கண்டு-நாங்கள்
அதிர்ச்சி அடைந்துவிட்டோம்*****
அந்த நிலைமையை
தமக்குச் சாதகமாக்கி
'இராணுவத்தை விடக் கேவலமாக'-இப்
பசுத்தோல் போர்த்திய
பாசிச வெறியர்கள்
பதவி ஆசையில்-புரட்சியை மறந்து
நடத்தி முடித்த
'அரக்க நாடகத்தில்'*****
மக்கள்கூட அதிர்ச்சி அடைந்துவிட்டனர்!



அந்த அரக்கர்கள்
அரங்கேற்றிய அந்த நாடகத்தில்******
ஈழமண்ணில்
எமது தோழர்கள் சிதறிய சதைத்துண்டுகளாக
எமது தோழிகள் கடத்தப்பட்டவர்களாக
எமது தலைவன் எரிந்த நிலையிலாக
எமது மக்கள் எதிரிக்கு விற்கப்பட்டவர்களாக
எமது போராட்டம் பின்தள்ளப்பட்டதாக
மாற்றப்பட்ட
இந்த வேளையில்
அன்று
இறுதிவகுப்பில்
தலைவா! நீ!
உரைத்துவிட்ட அந்த வார்த்தைகளில்-எனக்கு
சந்தேகம் வந்துவிட்டது*******
இவற்றை
எதிரி செய்திருந்தால்
இந்த சந்தேகம்
எனக்கு வந்திருக்காது-----!
ஆனால்
சிறீ அண்ணா!
எங்களின் வழிகாட்டியே!
மக்களின் மானசீக தலைவனே!
இந்தக் கொடுமைகளை
எம்மிடமிருந்து
'ஆயுதவெறிகொண்டு'
பிரிந்து சென்றவர்கள்------!
மிருகத்தின் பெயர் கொண்டதால்
மனிதவடிவில்
மிருகமாகத் திரிபவர்கள்---!
'தமிழ் ஈழம்'-தமது
தாகம் என்றவர்கள்
திசையை மாற்றிக்கொண்டு-எம்
தோழர்களின் குருதியால்
தாகத்தைத் தணித்துக் கொண்டவர்கள்---!
'ஈழத்தின் விடுதலை'
என்ற பொது அடிப்படையில்
எமது தோழர்களாக
எதிரிக்கு எதிராக
போராடி இருக்கவேண்டியவர்கள்------!.
பதவி ஆசையால்-தம்
பாசிச சிந்தனையால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிர் புரட்சி சேற்றினுள்
முகத்தைப் புதைத்துக் கொண்டதால்
எதிரிக்குத் துணையாகிவிட்டவர்கள்
செய்துவிட்டதால்தான்
எனக்கு
அந்தச் சந்தேகம்
இன்று வந்துவிட்டது******
"சுருங்கக் கூறினால்"
உனது பாஷையில்
எதிரியை வென்றெடுக்க ஆயுதத்தை பாவிக்க வேண்டியவர்கள்
நோக்கத்தை மாற்றிக்கொண்டு
நடத்திவிட்ட அரக்க நாடகத்தில்****
ஈழத்தின் வீதிகளில்
எமது இரத்தம் ஆறாகப் பாய---!
எமது தோழிகள் மானம் இழக்க---!
எமது மக்கள் மரணஓலமிட------!
எமது தோழர்கள் கொல்லப்பட---!
எமது தலைவன் எரிக்கப்பட----!
எமது போராட்டம் சிதைக்கப்பட--!
எல்லாமே-இந்த
'விடுதலை விரோதிகளால்'
இனத்துரோகிகளால்
பாசிச வெறியர்களால்****
எதிரிக்கு
இரகசியமாக
"ஏகாதிபத்திய திரைமறைவில்"
விற்கப்பட்டுவிட்ட
இந்த நிலைமையில்
எனக்குப் புரிகின்றது****
ஆமாம்!
எனக்குப் புரிகின்றது
ஆயுதங்கள் ஏந்திவிட்ட-இவர்களின்
இலக்குக்கள் தவறிவிட்டதால்
இவர்கள்
எதிரிக்குச் சாதகமான எதிர்புரட்சிச் சக்திகள்****
"அப்படியானால்
எதிரியை அழிக்கவே ஆயுதம் என்றால்
எதிர்புரட்சி சக்தியாகிப்போன இவர்களை என்ன செய்ய?"
இந்த சந்தேகம்
இப்போ வந்துவிட்டது
எந்தன் தலைவா-நீ
எங்கே இருக்கின்றாய்?
எனக்குச் சொல்லேன் இதனைத் தீர்க்க ஓடி வருகின்றேன்!



"அடிப்படை மக்களின்'அனைத்து விடுதலை'எமது இலட்சியம்
இதற்கு எதிராகச் செயற்படுபவர்கள் எமக்கு எதிரிகள்"
ஓ! சரி அண்ணை!
அன்று
இறுதி வகுப்பில்
இதனையும் கூட கூறியது நீதானே?!
அப்படியானால்
மக்களின் விடுதலைக்காக
ஆயுதம் ஏந்திய
எங்களைக் கொல்பவர்களும்
எதிரிகள் தானே--?
இனவெறிகொண்ட
இலங்கை இராணுவத்தைப் போல
ஈழத்தின் வீதிகளில்
இந்த
அரக்க நாடகங்களை
நடத்தி முடித்த
பாசிச வெறியரும்-எம்
எதிரிகள் தானே--------?!
"அடிப்படை மக்களின்
அனைத்து விடுதலை
எமது இலட்சியம்-இதற்கு
எதிராகச் செயற்படுபவர்
எமக்கு எதிரிகள்"
"எதிரியை அழிக்கவே
எங்களுக்கு ஆயுதங்கள்"
"இப் பாசிச வெறியர்களோ
ஈழத்தின் வீதிகளில்
எதிரிக்காக
'விபச்சார வியாபாரம்'செய்தவர்கள்.
இதற்கு மேலும்
என்ன சந்தேகம்---?
மக்களே!
சிந்திக்கத் தொடங்குங்கள்
எதிரியை இனம் காண்போம்
"எழுச்சி"கொள்வோம்------!
புரட்சியை நடாத்துவோம்
இன்றுவரை மரணித்த எமது தோழர்களின்
"விடுதலைக் கனவுகளை நிஜங்கள் ஆக்குவோம்"
என்று
எம் தலைவனின் நினைவுச்சமாதியில் சபதம் செய்வோம்'.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## எங்களுக்காவும் குரல் கொடுங்கள்

(புலிப்படைப்போராளி ஒருவரின் வேண்டுகோள்)

நினைத்துப்பார்க்கின்றேன்
நெஞ்சம் நடுங்குகின்றது
இன்றைக்கு
ஒரு மாதத்திற்கு முன்பு
நான் சார்ந்து விட்ட
"விடுதலைப்புலிகள்" என்ற 'அராஜகஅமைப்பு'
நடத்தி முடித்துவிட்ட
அரக்க நாடகத்தினை
நினைத்துப்பார்க்கவே
எனது
நெஞ்சம் நடுங்குகின்றது*************

இயக்க வெறி
குழுவாதம்
தனிநபர் தலைமை
இவற்றின் அடித்தளத்தில்
"போலி மாக்சிச பாசிச விரும்பிகள்"
முன்னுரை எழுத
நாங்களும் 'முற்போக்கு வாதிகள்'
என்ற அடிப்படையில்
போலிச்சிவப்பு காட்டி
ஈழத்தில்
மக்களை பலிகொடுத்தே
எங்களை வளர்த்து
விடுதலைப்புலிகள் என்ற பெயரில்
இயங்கும்
'பாசிசப் பாசறையில்'
வாழ்ந்த நாட்களை
நினைத்துப்பார்ககவே
நெஞ்சம் நடுங்குகின்றது*************

ஈழத்தின் விடுதலை
எங்கே--?
எப்படிக் கிடைக்கும்--?
என்றே புரியாத
இந்த நிலைமையில்
மக்கள் இருக்கையில்
அதனை மறந்து
"தலைமை பதவி" என்ற வெறியில்
போலித்தலைமையை-அதன்
அடித்தளத்தை
பேணிப் பாதுகாக்க
போலிப்புரட்சி நடத்தும்



மாக்சிச முதலாளிகளை
பேணிப்பாதுகாக்க
இவர்கள் நடாத்திவிட்ட
அரக்க நாடகங்களை
நினைத்துப்பார்க்கவே
நெஞ்சம் நடுங்குகின்றது***************

நாங்களும் கூட
ஈழத்தின் விடுதலைக்காக
உயிரைப் பணயம்வைத்து
போராடப்புறப்பட்ட
'விடுதலைப்போராளிகள்' தான்
ஆனாலும் கூட
விடுதலைப்புலிகளின் அராஜகத்தலைமை
வெளியே காட்டிய
'போலிப்பிரச்சாரத்தை' -அப்பாவித்தனமாக
நம்பிக்கொண்டு
இணைந்து செயற்பட்ட
அந்த நாட்களை
நினைத்துப்பார்க்கவே
நெஞ்சம் நடுங்குகின்றது***************

கடந்த நாட்களில்
விடுதலைப்போராளி என்ற உரிமையில்
தன்னை விமர்சித்ததிற்காக
ஆத்திரம் கொண்டு
பாசிச வெறிகொண்ட
'புலிகளின் தலைவன்'
உண்மைப்போராளிகளில் ஒருவரான
"ஒபரோய் தேவனை"
சுட்டுக் கொலைசெய்து
கள்ளன்-சமூகவிரோதி என்று
பிரச்சாரம் செய்தபோது
இவர்களை விட்டு
விலகி இருக்கவேண்டும்*****************

இதற்கு மேலாக
தன்னைவிட மேலாக-திறமையுடன்
தாக்குதல் செய்கின்றான்
என்ற பொறாமையில்
"TELE"ஜெகனை
தீரவிசாரிக்காமல்
சுட்டுக்கொலை செய்தபோது-இவர்களை விட்டு
விலகி இருக்கவேண்டும்

www.tamilarangam.net



இப்படித்தானே
எண்பத்தியோராம் ஆண்டில்
புலிகளைவிட்டு
இந்தக்காரணங்களால் -பல
தோழர்கள் பிரிந்து
சென்ற போது
இதயம் பொறுக்காமல்
*புலிகளில் இருந்து
பிரிந்து செல்பவர்கள்
போராட்டத்தை
கைவிடவேண்டும் -இப்படி
விலகிச் செல்பவர்கள்
வேறு இயக்கத்தில்
தம்மை இணைத்தால் -அவர்கட்கு
மரணதண்டனை வழங்கப்படும்------
*புலிகளே
ஈழப்போராட்டத்தை நடத்த
ஏகஉரிமை கொண்டவர்கள்
ஆதலால்
புலிகளை விமர்ச்சிப்பவர்கள்
'பொதுமக்களாக இருந்தாலும்'
தமிழ் இனத்தின் துரோகிகள்
என்று சாட்டப்பட்டு
கொல்லப்படுவார்கள்----------
என்றெல்லாம்
எவரையும் கேட்காமல்
தமக்குள் தாமே
வரையறைகளை விதித்துக்கொண்டு
இந்த அடிப்படையில்
*'புளொட்டின்'தலைவர்
தோழர் உமாவை
கொல்ல முயன்றபோது--------
*புலிகளின்
சிந்தனை தவறுகளை
இனம் கண்டு
விலகிச் சென்ற
தோழர் சுந்தரத்தை
சுட்டுத்தள்ளியபோது-----------
*மக்களைக் கொண்டே
புரட்சியை நடத்தும்
இலட்சியம் கொண்டால்
தங்களை விடவும்
வளர்ந்து விடுவார்கள்
என்ற பொறாமையில்



'EPRLF'ன் செயலதிபர்
தோழர் பத்மநாபாவை
கொல்ல முயன்றபோது----------
*காத்தான் குடிக்
கொள்ளை மூலம்
தம்மை விடவும் -இவர்கள்
மக்கள் மத்தியில்
புகழைப் பெறுகின்றார்கள்
என்ற எரிச்சலில்
'TEA'ன் தலைவர்
பனகொடை மகேஸ்வரனை
கொல்ல வென்று
கட்டளை பிறப்பித்தபோது--------

இவர்களைப் பற்றி
இவர்களின் உண்மை மனநிலையை
புரிந்து கொண்ட
என்னைப் போன்றவர்கள்
இவர்களை விட்டு-என்றோ
விலகி இருக்கவேண்டும்*************
அப்படி விலகிச்சென்று
எந்த மக்களுக்காக
போராட புறப்பட்டோமோ?
அந்த மக்களுக்கு
விடுதலைப்புலிகளின்
அராஜக தன்மைபற்றி
அவர்களில் ஊறியுள்ள
பாசிச வெறியைப்பற்றி
எடுத்துச் சொல்லி
இவர்களை நாங்கள்
அம்பலப் படுத்தி
இருக்கவேண்டும்********
ஆனால்
அப்படிச் செய்யமுடியாத
துர்ப்பாக்கிய நிலையில்
என்னைப் போன்றவர்கள்
புலிகளின்
இருட்டு முகாம்களில்
சிந்தனை செய்யும்
சுதந்திரம் கூட தரப்படாமல்
அடக்கிவைக்கப்பட்டுள்ளோம்********
இந்த நிலமையில்
என்னைப் போன்ற அதிருப்தியாளர்கள்
சற்று துணிவுடன்
இந்த பிரச்சனைகளை
விமர்ச்சிக்க முயன்றவர் நடந்தது என்ன?

www.tamilarangam.net



இப்படி
எங்கள் முகாம்களிலேயே
எங்கள் தோழர்கள்
தங்கள் அதிருப்தியை
தெரிவிக்க முயன்றபோது
நடந்தது என்ன------?
*அராஜகத் தலைமையின்
கட்டளைப்படி
ஏனைய இயக்கத்தின்
விடுதலைப்போராளிகளை
கொல்ல மறுத்ததால்
எம்மில் எத்தனை தோழர்கள்
இயக்கப்பாசறையில்
கொல்லப்பட்டுவிட்டனர்-------!
*தனிநபர் தலைமையை
தட்டிக் கேட்க
முயன்ற காரணத்தால்
எத்தனை தோழர்கள்
எங்கள் தலைமையால்
'ஈழத்துரோகி' என்ற போலிக்குற்றச்சாட்டுடன்
சாகடிக்கப்பட்டவிட்டனர்
*உலகப்புரட்சி வரலாறுகளை
புரட்டிப் படிக்க
முயன்ற தோழர்கள்
சந்தேகத்தின் அடிப்படையில்
'உளவுப்படையால்'
கண்காணிக்கப் படுகின்றனர்--------!
*மனிதமனத்தின்
இயல்பான ஆசையுடன்
எங்களைப்போன்ற விடுதலைப்போராளிகளே
என்ற அடிப்படையில்
ஏனைய இயக்க தோழர்களுடன்
கலந்து பழக முயன்றவர்கள்
'உளவாளிகள்'
என்று சந்தேகித்து
தண்டிக்கப்படுகின்றனர்----------!
இப்படிப்பட்ட
எங்கள் தலைமையின்
அராஜக செயல்களால்
புலியை விட்டு
விலகிப்போய்விட்ட-எங்கள்
முக்கிய தோழர்களான
"ராகவன் தொடக்கம் ராமன்ஜு வரைக்கும்
எல்லோரும் எங்களுக்காக குரல்கொடுப்பார்கள்



"விடுதலைப்புலிகளின் அராஜகத்தலைமை"
ஈழத்தின் வீதிகளில்
நடத்திவிட்ட
வெறிச்செயல்களில்
'ரெலோவின்'
தலைமை அழிக்கப்பட்டு விட்டது
போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர்
ஈழவிடுதலை பின்தள்ளப்பட்டுள்ளது
இந்த நிலையிலும்
நீங்கள்
எங்களை விடப் பாக்கியசாலிகள்
ஏனெனில்----
பாசிசவெறியரால்
நீங்கள் அடைந்த
பாரிய இழப்புக்கள்
உலகுக்கு தெரிகின்றது************!.
ஆனால்
எதுவும் புரியாமல்-இப்
பாசிசதலைமையின்
பாசறை இருளில்
உலகிற்கு கேட்காமல்
ஈனக்குரலில் ஒலிபடுகின்ற
(உங்களைப் போன்ற)விடுதலைப்போராளிகளான
எங்களை மீட்டெடுக்க
எங்களுக்காக குரல்கொடுக்க
உங்களை வேண்டுகின்றோம்******************
"எந்த வெறியரால்
இத்தனை இழப்புகள்
உங்களுக்கு ஏற்பட்டதோ
அந்த வெறியரின்
பாசறையில் இருக்கும்
நாங்களும் கூட
உங்களுடன் சேர்ந்து
துக்கம் அனுசரிக்கின்றோம்"

"காலம் மாறும்-இப்
பாசிசக்குகையில் இருந்து
நாம் விடுதலையடைவோம்------!
நாளை நடக்கும்-தேசிய
விடுதலைப்போரில்
உண்மைப்போராளிகளுடன் கரம்கோர்த்து
போராட
நாங்களும் காத்திருக்கின்றோம்"
"ஆதலால் அராஜகத்தலைமையுடன் எங்களையும் சேர்த்து துரோகிகள்
ஆக்காதீர்கள்!ஏனெனின் நாங்கள் உண்மையான போராளிகள்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்படி
எங்கள் முகாம்களிலேயே
எங்கள் தோழர்கள்
தங்கள் அதிருப்தியை
தெரிவிக்க முயன்றபோது
நடந்தது என்ன------?

*அராஜகத் தலைமையின்
கட்டளைப்படி
ஏனைய இயக்கத்தின்
விடுதலைப்போராளிகளை
கொல்ல மறுத்ததால்
எம்மில் எத்தனை தோழர்கள்
இயக்கப்பாசறையில்
கொல்லப்பட்டுவிட்டனர்--------!

*தனிநபர் தலைமையை
தட்டிக் கேட்க
முயன்ற காரணத்தால்
எத்தனை தோழர்கள்
எங்கள் தலைமையால்
'ஈழத்துரோகி' என்ற போலிக்குற்றச்சாட்டுடன்
சாகடிக்கப்பட்டவிட்டனர்

*உலகப்புரட்சி வரலாறுகளை
புரட்டிப் படிக்க
முயன்ற தோழர்கள்
சந்தேகத்தின் அடிப்படையில்
'உளவுப்படையால்'
கண்காணிக்கப் படுகின்றனர்--------!

*மனிதமனத்தின்
இயல்பான ஆசையுடன்
எங்களைப்போன்ற விடுதலைப்போராளிகளே
என்ற அடிப்படையில்
ஏனைய இயக்க தோழர்களுடன்
கலந்து பழக முயன்றவர்கள்
'உளவாளிகள்'
என்று சந்தேகித்து
தண்டிக்கப்படுகின்றனர்----------!

இப்படிப்பட்ட
எங்கள் தலைமையின்
அராஜக செயல்களால்
புலியை விட்டு
விலகிப்போய்விட்ட-எங்கள்
முக்கிய தோழர்களான
"ராகவன் தொடக்கம் ராமன்ஜு வரைக்கும்
எல்லோரும் எங்களுக்காக குரல்கொடுப்பார்கள்



"விடுதலைப்புலிகளின் அராஜகத்தலைமை"
ஈழத்தின் வீதிகளில்
நடத்திவிட்ட
வெறிச்செயல்களில்
'ரெலோவின்'
தலைமை அழிக்கப்பட்டு விட்டது
போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர்
ஈழவிடுதலை பின்தள்ளப்பட்டுள்ளது
இந்த நிலையிலும்
நீங்கள்
எங்களை விடப் பாக்கியசாலிகள்
ஏனெனில்----
பாசிசவெறியரால்
நீங்கள் அடைந்த
பாரிய இழப்புக்கள்
உலகுக்கு தெரிகின்றது************.

ஆனால்
எதுவும் புரியாமல்-இப்
பாசிசதலைமையின்
பாசறை இருளில்
உலகிற்கு கேட்காமல்
ஈனக்குரலில் ஒலமிடுகின்ற
(உங்களைப் போன்ற)விடுதலைப்போராளிகளான
எங்களை மீட்டெடுக்க
எங்களுக்காக குரல்கொடுக்க
உங்களை வேண்டுகின்றோம்*****************

"எந்த வெறியரால்
இத்தனை இழப்புகள்
உங்களுக்கு ஏற்பட்டதோ
அந்த வெறியரின்
பாசறையில் இருக்கும்
நாங்களும் கூட
உங்களுடன் சேர்ந்து
துக்கம் அனுசரிக்கின்றோம்"

"காலம் மாறும்-இப்
பாசிசக்குகையில் இருந்து
நாம் விடுதலையடைவோம்------!
நாளை நடக்கும்-தேசிய
விடுதலைப்போரில்
உண்மைப்போராளிகளுடன் கரம்கோர்த்து
போராட
நாங்களும் காத்திருக்கின்றோம்"

"ஆதலால் அராஜகத்தலைமையுடன் எங்களையும் சேர்த்து துரோகிகள்
ஆக்காதீர்கள்!ஏனெனின் நாங்கள் உண்மையான போராளிகள்"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சாம்பல் மேட்டில் ராஜ்யம்

சாம்பல்மேடுகளில்
நெல்லைப் பயிரிட்டு
கதிர்கள் வருமென்று
கனவு காண்கின்ற சமுதாயமுட்டாள்களே
ஓ! ஈழத்தின் மக்களே!
உங்களுக்கு—இனம்
காட்ட விளைகின்றோம்******************!
ஈழத்தின் விடுதலையை
கேள்விக்குறியாக்கி
எதிரியின் சக்தியை
எடைபோடத் தவறிவிட்ட—ஈழத்தை
சாம்பல் மேடாக்கி—தமது
சாம்ராஜ்யத்தினை
நிறுவத்துடிக்கின்ற போலிப்புரட்சியாளரை
ஓ! ஈழத்தின் மக்களே!—உங்களுக்கு
இனம்காட்ட விளைகின்றோம்***********!
எதிரி யாரென்று
இனம்காண இயலாமல்—இலங்கை
இராணுவ வெறியர்களின்
அராஜக செயல்களைப்போல்
"மரணநாடகங்களை"—நம்மவரின்மேல்
நாங்களும் செய்வோம்—என்று
கடந்த மாதம்
ஈழத்தின் வீதிகளில்
அரக்கநாடகங்களை அரங்கேற்றிவிட்டு—அந்த
சாம்பல்மேடுகளில்—தமது
சாம்ராஜ்யங்களை
நிறுவத்துடிக்கின்ற போலிப்புரட்சியாளரை
ஓ! ஈழத்தின் மக்களே!—உங்களுக்கு
இனம்காட்ட விளைகின்றோம்**************!
எங்கள் தோழர்களின்
உயிர்களைக் குடித்து—தங்கள் உடல்களை
மதம் கொள்ளவைத்து—தாங்கள் நடத்திவிட்ட
எதிரியைக்கூட நடுங்கவைக்கும்
பயங்கர வெறியாட்டத்தில்—ஈழமண்ணில்
இரத்த வெள்ளத்தில்
விழுத்தப்பட்டுவிட்ட
எங்கள் தோழர்களின்
எங்கள் மக்களின்
எங்கள் இனத்தின்—ஆமாம்
எங்கள் இனத்தின்------



----மனித உடல்கள்
எரிந்த வீடுகள்
அழிந்த உடமைகள்
இவற்றின் மூலம்
"புலிப்படை வெறியர்
மக்களின் விடுதலை—என்ற போர்வையில்
நிறைவேற்றிவிட்ட
பாசிச வெறியாட்டத்தில்"
எமது மக்களுக்கு
புலிப்படை வெறியரால்
விடுதலைப்பரிசாக வீசியெறியப்பட்ட
எமது இனத்தின்
மனித உடல்கள்
எரிந்த வீடுகள்
அழிந்த உடமைகள்
இவற்றில் இருந்து
ஈழமண்ணில் பூத்துவிட்ட
சாம்பல் மேட்டில்
'பதவிவெறிகொண்டு' ஆயுதவெறியாட்டத்தால்—தமது
சாம்ராஜ்யங்களை
நிறுவத்துடிக்கின்ற போலிப்புரட்சியாளரை
ஓ! ஈழத்தின் மக்களே!—உங்களுக்கு
இனம்காட்ட விளைகின்றோம்*****************!
நேற்றுமட்டும்
எங்கள் மண்ணில்
மனித சடலங்கள்
எரிந்த வீடுகள்
அழிந்த உடமைகள்
இவற்றின் மூலம் பூத்துவிட்ட சாம்பல்மேடுகள்---
இவற்றை
விடுதலைப்போராளிகளும்
ஈழமக்களும்
காணத்தான் நேர்ந்தது
ஆனாலும்
பேரினவாத இனவெறியரசின்
இராணுவவெறியரால்—இவ்
மாண்டக் கொடுமைகளும் மரணஓலங்களும்
நிகழ்த்தப்பட்டபோது—எம்
விடுதலைப்பாதையில் எதிரிகள்என்று
இனம்காணப்பட்டவர்கள்
விடுதலைகிடைக்கையில் அகற்றப்படுவர்
என்ற நம்பிக்கை
எங்கள் நெஞ்சங்களின் "நம்பிக்கைநட்சத்திரத்தை"
இன்று வரைக்கும் காத்துவந்தது**************!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனால்
இன்று
இப் பாசிச வெறிபிடித்த-புலிப்படை அமைப்பின்
அராஜகத்தலைமை
இனவெறி அரசின் இராணுவம் போல
பதவி வெறியில்-எமது
ஈழமண்ணை
இப்படிப்பட்ட
மிருகக்கொடுமைகளால்
சாம்பல்பூத்த மேடுகளாக்கி-அந்த
"சாம்பல் மேடுகளில் சாம்ராஜ்யங்களை"
நிறுவத்துடிக்கின்ற போலிப்புரட்சியாளரை
ஓ! ஈழத்தின் மக்களே! -உங்களுக்கு
இனம்காட்ட விளைகின்றோம்******************!


**THAMIL EELAM**
**LIBERATION ORGANIZATION**

ஈழப்போராட்டத்தில் இன்னுயிர் ஈந்த விடுதலைப் போராளிகள் அனைருக்கும் இம் மலர் சமர்ப்பணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விலங்கறுப்போம் நிச்சயம்!



## தாயே உன் வீரமகன் ஆணை இது.